எம்.சி.எண்.4/2022 நாள்: 05.07.2023

ம.சா.2 காளியம்மாள்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்குவிசாரணை:</u>**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து தெரிந்து கொண்டேனா படிக்க கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ம.சா.1 என்னிடம் படித்து காட்டி விவரங்களை சொன்னார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். மனுதாரருக்கு நடந்த திருமணத்திற்கு என்னை அழைத்ததன் பேரில் நான் சென்றேனா என்றால் சென்றேன். தற்போது மனுதாரரின் 2 மகள்களும் அரசு பள்ளியில் படித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். மனுதாருக்கு குழந்தைகள் பிறந்த போது பிரசவ செலவு யார் பார்த்தது என்றால் முதல் குழந்தைக்கு எதிர்மனுதாரரும், 2வது குழந்தைக்கு நாங்களும் பார்த்தோம்.

2. கடந்த ஓராண்டுகளில் நான்கு முறை மனுதாரை வந்து சேர்ந்து வாழ சொல்லி எதிர்மனுதாரர் அழைத்தார் என்று சொன்னால் ஒரு முறை மட்டும் ஆட்களுன் எதிர்மனுதாரர் வந்தார். அப்போது நாங்கள் உங்களது அம்மா, அப்பாவுடன் வாங்க பேசிக்கொள்வோம் என எதிர்மனுதாரிடம் சொன்னோம்.ஆனால் அவர் நான் விரும்பி தான் திருமணம் முடித்தேன் அதனால் நாங்கள் மனுதாரரை அனுப்பி வைக்கவில்லை. மனுதாரரை பார்க்க வரும்போது எதிர்மனுதாரர் பணம், தேவையான பொருட்கள் அனைத்தும் குழந்தைக்கு வாங்கி கொடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 5 வருடமாக எதிர்மனுதாரர் வந்து முறையாக பார்க்கவில்லை என்றும் எந்த வித உதவியும் மனுதாரர்களுக்கு செய்யவில்லை என்றும் நாங்கள் தான் மனுதாரர்களை பார்த்து வருகிறோம்.

3. எதிர்மனுதாரர் 1ம் மனுதாரர் மற்றும் அவரது குழந்தைகளுடன் வாழ ஆசைப்படுகிறார் ஆனால் நான் தான் தடுக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது மனுதாரர்களை அழைத்து சென்றால் நான் அனுப்பி வைப்பேனா இல்லை ஏனென்றால் எதிர்மனுதாரரின் தந்தை மனுதாரர்களை பார்க்க வந்ததை அறிந்து எதிர்மனுதாரர் அவரின் தந்தையை ஏன்

மனுதாரர்களை பார்க்க சென்றாய் என வெட்டிவிட்டார். எந்த விதமான நியாயமான காரணமும் இன்றி சேர்ந்து வாழாமல் வேண்டுமென்றே 1ம் மனுதாரர் இந்த வழக்கை மனுதாரர்களுக்காக தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.